**Press Release**

# 18 வயதான இளம் வேகப்பந்து வீச்சாளர், மணிக்கு 141 கி.மீ என்ற அதிவேகத் திறனுடன் Airtel Fastest பட்டத்தை தனதாக்கிக்கொண்டார்.

- இரத்தினபுரியைச் சேர்ந்த எஷான் மலிங்க, மணிக்கு 141 கி.மீ என்ற வேகத்துடன், Airtel Fastest பட்டத்தையும், 19 வயதுக்குக் கீழ்பட்ட பிரிவில் சம்பியன் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.
- கண்டியைச் சேர்ந்த 'பெண் சிலிங்க மலிங்க' ஷயானி சேனாரத்ன, திறந்தநிலை பெண்கள் பிரிவில் மணிக்கு 104 கி.மீ என்ற வேகத்துடன் வெற்றியை தனதாக்கிக்கொண்டார்.
- தங்கல்லையைச் சேர்ந்த மலிந்து ஷெஹான் மணிக்கு 140 கி.மீ என்ற வேகத்துடன் 19 வயதுக்கு மேற்பட்ட பிரிவில் வெற்றிவாகை சூடினார்.

இலங்கையின் முதன்மையான வேகப்பந்துவீச்சு திறமைகளைக் கொண்ட இளைஞர் குழாம், Airtel Fastest போட்டியின் மூலமாக புதிய ஆற்றலையும் உத்வேகத்தையும் பெற்றுக்கொண்டனர். தெரணவுடன் இணைந்து நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் 3 பேர் வெற்றியாளர்களாக மகுடம் சூட்டப்பட்டனர்.

முதல் தடவையாக நடைபெற்ற இந்த Airtel Fastest போட்டியில் 19 வயதுக்கு கீழ்பட்ட பிரிவில் போட்டியிட்ட எஷான் மலிங்க மணிக்கு 141 கி.மீ என்ற வேகத்துடன், ஒட்டுமொத்த வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டார். அவரைத் தொடர்ந்து 19 வயதுக்கு மேற்பட்ட பிரிவில் போட்டியிட்ட மலிந்து ஷெஹான், மணிக்கு 140 கி.மீ என்ற வேகத்துடன் வெற்றிவாகை சூடினார். அதேநேரம் ரசிகர்களின் அமோக ஆதரவைப் பெற்று 'பெண் சிலிங்க மலிங்க' என அனைவராலும் அழைக்கப்பட்ட ஷயானி சேனாரத்ன, திறந்தநிலை பெண்கள் பிரிவில் மணிக்கு 104 கி.மீ என்ற வேகத்துடன் சம்பியன் பட்டத்தை பெற்றுக்கொண்டார்.

எயார்டெல்லின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜினேஸ் ஹெட்கே இந்நிகழ்வில் உரையாற்றும்போது, "எயார்டெல் லங்காவானது, முதன்மையாக தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பு சக்தியை மேம்படுத்தும், இளைஞர் வலுவூட்டலுக்கான ஆர்வத்துடன் இயக்கப்படும் ஒரு வர்த்தக நாமமாகும். எனவே Airtel Fastest உடன் இணைந்து, இந்த இலட்சியங்களை கிரிக்கட் அரங்கிற்குள் கொண்டுவர முயன்றோம். அந்த வகையில் உலகத்தரம் வாய்ந்த பயிற்சிகள் மற்றும் அவர்களது சொந்த கிரிக்கட் நாயகர்களின் வழிகாட்டுதலுடன், தேசிய அணியில் விளையாடுவதற்கான அவர்களது கனவை நனவாக்குவதற்காக, இந்த திட்டத்தின் மூலம் தேசிய பந்துவீச்சுக் குழாமை வளப்படுத்த, புதிய தலைமுறை இளம் திறமையாளர்களை இணைக்க நாங்கள் தீர்மானித்தோம். அதேநேரம் நாடு முழுவதிலுமிருந்து வரும் இளைஞர்களுக்கு அவர்களது ஆர்வத்தை தொடர்வதற்கான உத்வேகத்தையும் நாம் வழங்கினோம்" என்று தெரிவித்தார்.

"எங்களுடைய குறிப்பிடத்தக்க இந்தத் திட்டத்தின் பெறுபேறுகள் தற்போது தெளிவாகத் தெரிகிறது. சில இளைஞர்கள் புகழ்பெற்ற விளையாட்டுக் கழகங்களில் தற்போது இணைக்கப்பட்டிருக்கும் நிலையில், இதன் சிறப்பம்சம் என்னவென்றால், இறுதிப் பெண் போட்டியாளர்களும், Airtel Fastest வெற்றியாளரும் தேசிய அணியில் பயிற்சிகளுக்காக இணைக்கப்பட்டுள்ளார்கள். இது உண்மையில் எமக்கு பெருமிதத்தை அளிக்கிறது. இப்போட்டியில் பங்கேற்ற அனைவரும் வெளிப்படுத்திய குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் மற்றும் அச்சமற்ற உறுதியைக் கண்டு நாம் அனைவரும் பெருமைப்படுகிறோம்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தப் போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் இரண்டாம் இடத்தைப் பெற்றவர்களும் கௌரவிக்கப்பட்டார்கள். அந்த வகையில் 19 வயதுக்குக் கீழ்பட்ட பிரிவில் மணிக்கு 134 கி.மீ வேகத்துடன் மொஹமட் அகிலும், 19 வயதுக்கு மேற்பட்ட பிரிவில் மணிக்கு 137 கி.மீ வேகத்துடன் மொஹமட் ∴பாஹிமும், திறந்தநிலை பெண்கள் பிரிவில் மணிக்கு 101 கி.மீ வேகத்துடன் 14 வயதான மல்ஷா மதுஷானியும் இரண்டாம் இடங்களை தமதாக்கிக்கொண்டனர்.

இலங்கை முழுவதிலுமுள்ள ஆர்வமுள்ள வேகப்பந்துவீச்சாளர்களின் திறமைகளைத் தேடுவதற்கும், மேம்படுத்துவதற்கும் வடிவமைக்கப்பட்ட ஒரு முழுமையான திறன் தேடல் மற்றும் பயிற்சித்திட்டமான Airtel Fastest இல் உச்சகட்டமாக, 10,000 ஆர்வமுள்ள திறமையாளர்கள் மத்தியிலிருந்து அதிசிறந்த 3 போட்டியாளர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தெரணவுடன் இணைந்து இலங்கையின் முன்னாள் தேசிய பந்துவீச்சுப் பயிற்சியாளர் அனுஷ சமரநாயக்கவின் வழிகாட்டுதலின் கீழ் கடந்த பெப்ரவரி மாதம் Airtel Fastest போட்டி ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையின் 11 மாவட்டங்களிலிருந்து, தேசிய அணியில் விளையாடும் திறன் கொண்ட இளைஞர் யுவதிகளை அடையாளம் காணும் நோக்கில், திறந்தநிலை தேர்வு நடத்தப்பட்டது.

அதன் பயனாக 145 வேகப்பந்துவீச்சாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களிலிருந்து 45 பேர் இரண்டாம் சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுக்கு வேகப்பந்து வீச்சாளர் சமரநாயக்க, தற்போதைய இலங்கை T20 அணியின் தலைவரும், புகழ்பெற்ற வேகப்பந்து வீச்சாளருமான லசித் மலிங்க ஆகியோருடன் இலங்கை கிரிக்கட் அணியின் ஜாம்பவான்களான சமிந்த வாஸ், ஹஷான் திலகரத்ன மற்றும் உபுல் சந்தன ஆகியோரை உள்ளடக்கிய எயார்டெல்லின் 'சூப்பர் ஸ்டார் பயிற்சி அணி' பயிற்சிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

**-END-**

**படம் 1** : திறந்தநிலை பெண்கள் பிரிவில் வெற்றியாளர் ஷயானி சேனாரத்ன, பார்தி எயார்டெல் லங்காவின் வர்த்தகநாம மூலோபாயம் மற்றும் கூட்டுறவு தொடர்பாடல் தலைவரிடமிருந்து தனக்குரிய பரிசைப் பெறுகிறார்.

**படம் 2** : 19 வயதுக்கு மேற்பட்ட பிரிவில் வெற்றியாளர் மலிந்து ஷெஹான், எயார்டெல் CMO சந்திரசேகர் சிங் சௌஹானிடமிருந்து தனக்குரிய பரிசைப் பெறுகிறார்.

**படம் 3** : Airtel Fastest வெற்றியாளர் எஷான் மலிங்க, எயார்டெல் லங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ஜினேஸ் ஹெக்டே மற்றும் தேசிய வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க ஆகியோரிடமிருந்து தனக்குரிய பரிசைப் பெறுகிறார்.

**படம் 4** : 3 வெற்றியாளர்களுடன், பார்தி எயார்டெல் லங்கா மற்றும் தெரண அதிகாரிகள்.

**பார்தி எயார்டெல் லங்கா பற்றி**

இலங்கையில் 2009 ஆம் ஆண்டில் தனது சேவைகளுடன், வர்த்தகத் தொழிற்பாடுகளை ஆரம்பித்த பார்தி எயார்டெல் லங்கா நிறுவனம் ("எயார்டெல்"), அதிவேகமாக 1 மில்லியன் வாடிக்கையாளர்களை எட்டிய நிறுவனம் என்ற பெருமையை நிலைநாட்டியிருந்தது. தொழில்நுட்பவியல் புத்தாக்கம் மற்றும் தலைசிறந்த சேவை ஆகியவற்றை எயார்டெல் லங்கா வழங்கி வருவதுடன், இலங்கையில் இளைஞர், யுவதிகள் மத்தியில் மிக வேகமாக இது பிரபலமடைந்து வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இலங்கை முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள எயார்டெல் லங்கா நிறுவனம், குரல் (voice)> தரவு (data) மற்றும் நிறுவன தீர்வுகள்

(enterprise solutions) உள்ளடங்கலாக டிஜிட்டல் மொபைல் சேவைகளை வழங்கி வருகின்றது. தற்போது இலங்கையில் காணப்படும் வேகமான 3G மொபைல் வலையமைப்பாக தரப்படுத்தப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள தயவு செய்து www.airtel.lk என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.